இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-10-2023

# தி.மு.க.வும் விடுதலைப் போராட்ட வீரர்களும் 1

விடுதலைப் போராட்ட வீரர்களை திராவிட இயக்கம் கொண்டாடவில்லை என்பது போன்ற பொய்ப் பிரச்சாரத்தைத் தொடங்கி இருக்கிறார் கிண்டி மாளிகை ஆளுநர் ஆர்.என்.ரவி.

இவருக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும் தெரியாது. விடுதலைப் போராட்டம் பற்றியும் தெரியாது. தமிழ்நாடு பா.ஜ.க.வின் தலைவராக தன்னை நினைத்துக் கொண்டு நித்தமும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி.

கடந்த ஆண்டு இந்தியக் குடியரசு தின அணிவகுப்பில் இடம் பெறுவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட ஊர்தியை பா.ஜ.க. அரசு மறுத்தது. இந்திய விடுதலை வேள்விக்காக விறகு சுமந்த மருது சகோதரர்களும், இராணி வேலு நாச்சியாரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யும், மகாகவி பாரதியாரும்தான் அதில் இடம் பெற்றிருந்தார்களே தவிர, விடுதலைப் போராட்டத்துக்குத் தொடர்பில்லாத யாரும் இடம் பெறவில்லை. 'இவர்கள் யார்?' என்று அன்று அதிகாரிகள் கேட்டதாக டெல்லியில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ்களே செய்திகள் வெளியிட்டன. "இவ்விஷயத்தில் பிரதமர் உடனடியாகத் தலையிட்டு, விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்களிப்பு இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்" என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டார். "தமிழ்நாடு அலங்கார ஊர்தி தொடர்பாக, மாநில அதிகாரிகள் 3 முறை குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தனர். திருத்தங்கள் செய்து தரப்பட்ட 7 மாதிரிகளையும் ஒன்றிய அரசின் குழுவினர் மறுத்ததை ஏற்க முடியவில்லை. அதுவும் 4வது சுற்று கூட்டத்திற்கு தமிழக அதிகாரிகளை அழைக்காமலேயே குடியரசு தின அணிவகுப்புப் பட்டியலிலிருந்து பெயரை நீக்கியிருப்பது வேதனை தருகிறது" எனக் குறிப்பிட்டு இருந்தார். அப்போதும் அனுமதிக்கவில்லை.

**இந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் இரண்டு முக்கியமான முடிவுகளை எடுத்தார். இந்திய குடியரசு தின விழாவில் பங்கேற்கும் மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு முன்மொழிந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் உருவ மாதிரிகளை இந்திய பாதுகாப்புத் துறையின் உயர்நிலைக்குழு கவனத்தில் கொள்ளாத நிலையில், அந்தத் தலைவர்களின் விடுதலை வேட்கையைப் பறைசாற்றும் அலங்கார ஊர்தி தமிழகத்தில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பு விழாவில் இடம்பெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அலங்கார ஊர்தி தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் மக்களின் பார்வைக்காக அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறியிருந்தார். அதன்படி தமிழ்நாடு முழுவதும் இந்த ஊர்தி கடந்த ஆண்டில் வலம் வந்தது. அனைத்து ஊர்களிலும் சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கை எழுச்சியுடன் பறை சாற்றுவதற்கான களம் தமிழ்நாட்டில் அமைந்தது.**

இந்த ஆண்டுக்காக குடியரசு தின அணிவகுப்பில் அருந்தமிழ் ஔவை மூதாட்டி, வீரமங்கை வேலுநாச்சியார், சமூகச் சீர்திருத்த திராவிடத் தாய் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம், சமூகச் சீர்திருத்த முதல் மருத்துவர் முத்து லட்சுமி, இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி, நாட்டியக் கலைஞர் பால சரசுவதி, இன்றும் வாழும் இயற்கை விவசாயியான பாப்பம்மாள் - ஆகிய ஏழு முகங்களை தமிழ்நாட்டின் முகங்களாக எடுத்துக் காட்டியது தமிழ்நாடு. இவை எல்லாம் ஆளுநருக்குத் தெரியுமா?

நாட்டுப் பற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் உறுதியாக இருந்து வந்துள்ளது.

★ **சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது 1962 ஆம் ஆண்டு, திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**

★ **1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானம் போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.**

★ **1972 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறுகோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதல்வர் கலைஞர் அவர்கள். அன்றைய தினம் அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி. அதில் 6 கோடியை வழங்கியது தி.மு.க. அரசு.**

★ **அந்தப் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு, கலைஞரின் அரசு.**

★ **1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு, முதல்வர் கலைஞரின் அரசு.**

**எனவே நாட்டுப்பற்றை புதிதாக இங்கு வந்து யாரும் எங்களுக்குப் போதிக்கத் தேவையில்லை.**

★ **வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு இன்று கோட்டை அமைந்திருக்கிறது என்றால், அதனை அமைத்தவர் முதல்வர் கலைஞர். கட்டபொம்மன் பிறந்தநாளை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாட உத்தரவிட்டவரும், அரசுப் பதிவேட்டில் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரைப் பொறித்தவரும் முதல்வர் கலைஞரே. வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த பென்ஷன் 1952 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. அதனை 1969 ஆம் ஆண்டு திரும்ப வழங்கியவர் முதல்வர் கலைஞர்.**

★ **வ.உ.சி. என்ற பெயருக்கு சிறப்பான விளக்கம் அளித்தவர் கலைஞர் அவர்கள்.**

**வ - வழக்கறிஞர்**

**உ - உரிமைக்காகப் போராடிய,வாதாடிய வழக்கறிஞர்**

**சி - உரிமைக்காக வாதாடிச் சிறை சென்ற வழக்கறிஞர் - என்று விளக்கம் அளித்தார்.**

**கழக ஆட்சியில் 1968 ஆம் ஆண்டு இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு நடத்தப்பட்டபோது தலைநகர் சென்னையில் வைக்கப்பட்ட பத்துச் சிலைகளில் ஒன்று வ.உ.சிதம்பரனார் சிலை. கோவைச் சிறையில் இருந்தபோது செக்கு இழுக்க வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார் வ.உ.சி. அந்த செக்கை நினைவுச் சின்னமாக ஆக்கியவர் முதல்வர் கலைஞர் அவர்கள்.**

1972 ஆம் ஆண்டு வ.உ.சி.யின் நூற்றாண்டு விழாவை நாடு போற்றும் அளவில் மிகச்சிறப்பாகக் கொண்டாடியவர் முதல்வர் கலைஞர். அதே ஆண்டுதான் இந்திய நாடும் தனது 25 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது. இரண்டையும் இணைத்து தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனாருக்கு சிலை அமைத்தவர் முதல்வர் கலைஞர்.

★ எட்டையபுரத்தில் பாரதியார் வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவுச் சின்னம் ஆக்கியவர் முதல்வர் கலைஞர். 12.5.1973 அன்று, அன்றைய அமைச்சர் சி.பா. ஆதித்தனார் தலைமையில் நடந்த விழாவில் திறந்து வைத்தவர் முதல்வர் கலைஞர்.

★ பாரதியாரின் நண்பர் பரலி சு.நெல்லையப்பர் குடும்பத்துக்கு அரசு நிதி உதவி வழங்கியவர் முதல்வர் கலைஞர். இவை அனைத்தையும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே செய்து விட்டது கழகம்.

- தொடரும்

அக்.28, 29 தேதிகளில்

## திருவண்ணாமலைக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

*சென்னை, அக்.27-*

*பவுர்ணமியை முன்னிட்டு 28, 29ல் கும்பகோணம் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை கிரிவலம் செல்லும் பக்தர்களின் வசதிக்காக 150 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.*

*கும்பகோணம், தஞ்சை, பட்டுக்கோட்டை, திருச்சி, அரியலூர் என பல்வேறு பகுதிகளில் இருந்து பேருந்துகள் இயக்கப்படும். திருவண்ணாமலை, சென்னை தடத்தில் 50 கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவித்துள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.10.2023) முகாம் அலுவலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் மற்றும் அவரது கணவர் ஜீவன் ஆகியோர் தங்களது மணிவிழாவையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'!

# தகுதியுள்ளவர்கள் விடுபட்டுவிடக் கூடாதென்பதே அரசின் நோக்கமாகும்!

## சாத்தூரில் மேல்முறையீட்டு விண்ணப்பங்களை நேரில் ஆய்வு செய்த பின் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சாத்தூர்,அக்.27–**

**விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று (26.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில்,கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்காக வழிவகை செய்யும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தகுதியான குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமை தொகையில் வழங்க உத்தரவிட்டு, மாதந்தோறும் ரூ.1000/ வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற தமிழ்நாடு முழுவதும், 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதற்கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாம் கட்டமாகவும் முகாம்கள் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. தொடர்ந்து, விடுபட்டவர்களும், விண்ணப்பிக்க தவறியவர்களும் விண்ணப்பிக்க 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அரசிடம் உள்ள பல்வேறு தகவல் தரவு தொடர்பு தளங்களில் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஒப்பிட்டு, சரிபார்க்கப்பட்டு, அரசு அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகள் மூலம் சரிபார்க்கப்பட்டு, தகுதி வாய்ந்த சுமார் 1.65 கோடி மகளிர்களுக்கு ஒரு நாட்கள் முன்னதாகவே வரவு வைக்கப்பட்டது.

**கைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தி!**

அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் தகுதி இல்லாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பங்களின் நிலை குறித்த குறுஞ்செய்தியும் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால் நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் மூலமாக மேல்முறையீடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டது. மேல்முறையீட்டு கால அளவானது 24.10.2023 அன்றுடன் நிறைவடைந்தது. மேலும் இதுவரை பெறப்பட்டுள்ள மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் மீது நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் நடவடிக்கை எடுத்திட தொடர்புடைய மேல்முறையீட்டு அலுவலருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. மாநில அளவில் இது வரை சுமார் 11.85 இலட்சம் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலர்களால் பரிசளிக்கப்பட்டு வருகின்றது. இந்த மேல்முறையீட்டு மனுக்கள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், விண்ணப்பம் ஏற்கப்படாதவர்கள், மேல்முறையீட்டு மனுக்களை அளிப்பதற்கான காலம் நேற்று முன்தினத்துடன் முடிவுற்றது. தமிழ்நாடு முழுவதுமிருந்து 11 லட்சம் மேல்முறையீட்டு மனுக்கள் பெறப்பட்டன. அவற்றை சார் ஆட்சியர் துணை ஆட்சியர் வருவாய் கோட்ட அலுவலர்கள் பரிசீலித்து வருகின்றனர். இந்நிலையில், விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார். அப்போது மேல்முறையீடு செய்திருந்த மகளிரில் மூவரிடம் கைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினார். அப்போது, அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை எடுத்துக் கூறிய போது, அதன் நியாயத்தை உணர்ந்து, அவர்கள் ஏற்றுக் கொண்டனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விதிகளை பூர்த்தி செய்கிற ஒரு மகளிர் கூட, விடுபட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில் பணியாற்றிட அரசு அலுவலர்களை கேட்டுக் கொண்டார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மற்றும் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

**தொடர் ஆய்வு!**

ஏற்கனவே பெறப்பட்ட மனுக்களில் கள ஆய்விற்காகப் பரிந்துரைக்கப்பட்ட 7.71 இலட்சம் மனுக்களின் மீது கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் தகுதியான பயனாளிகளுக்கு விடுபாடுகள் ஏதும் இன்றி உரிமைத்தொகையானது சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான பணிகளை வேகப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டு, இவற்றை தொடர்ந்து முதலமைச்சர் கண்காணித்து வருகிறார். தகுதியுள்ள எந்த ஒரு குடும்பத்தலைவியும் இத்திட்டத்தில் விடுபட்டு விடக்கூடாது என்பதே அரசின் நோக்கமாகும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

முன்னதாக, மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் பணிகளை ஆய்வு செய்து, மேல்முறையீடு செய்திருந்த மகளிரில் மூவரிடம் கைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் கூறினார். அதன் நியாயத்தை உணர்ந்து, விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை ஏற்றுக் கொண்டனர்.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட விதிகளை பூர்த்தி செய்கிற ஒரு மகளிர் கூட, விடுபட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில் பணியாற்றிட அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

புல்வாமா தாக்குதலுக்கு

## மோடி அரசு செய்த தவறுகளே காரணம்!

ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, அக். 27-

புல்வாமா தாக்குதல் சம்பவத்துக்கு ஒன்றிய மோடி அரசு செய்த தவறுகளே காரணமென்றும், ஆனால் அந்த தாக்குதலை பா.ஜ.க. தனது அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்தி கொண்டதென்றும் ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் குற்றம்சாட்டியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக்குடன் காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி கலந்துரையாடினார். அப்போது அவரிடம், 2019ம் ஆண்டு புல்வாமா வில் தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டு தாக்குதலில் 40 சி.ஆர்.பி.எப். வீரர்கள் பலியானது குறித்து ராகுல் காந்தி கேள்வியெழுப்பினார். அதற்கு பதிலளித்த சத்யபால் மாலிக், வீரர்கள் இடப்பெயர்வுக்கு 5 விமானங்களை ஒன்றிய மோடி அரசு அளிக்கவில்லை என்றும், இந்த தவறே தாக்குதலுக்கு காரணமாகி விட்டதென்றும் குற்றம்சாட்டி னார். புல்வாமா தாக்குதலுக்கு அப்போது ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் காரணம் என்று தாம் ஒருபோதும் கூறவில்லை என்ற அவர், ஆனால் அவர்கள் தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக தாக்குதலைப் பயன்படுத்தியதாக தெரிவித்தார்.

புல்வாமா வுக்கு எப்படி மிகப் பெரிய அளவு வெடிபொருட்கள் வந்தன என ராகுல் காந்தி எழுப்பிய கேள்விக்கு, பாகிஸ்தானில் இருந்து வந்ததாகவும், ஆனால் அது கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சத்யபால் மாலிக் பதிலளித்தார்.

மணிப்பூர் கலவரத்தின் பின்னணி குறித்து ராகுல் காந்தி எழுப்பிய கேள்விக்கு, மணிப்பூரில் நடந்தது அரசின் ஒட்டுமொத்த தோல்வியை காட்டுகிறது என்றும், கலவரத்தை தடுக்க முதலமைச்சர் எதுவும் செய்யவில்லை என்றும், இதற்காக அவரை பதவியை விட்டு அகற்றவும் இல்லை என்றும் சத்யபால் மாலிக் விமர்சித்தார்.



ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நேற்று (26.10.2023) நடைபெற்ற 7 வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கிய செயற்குழுவின் விருதினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெற்றுக் கொண்டார்.